கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் அமைச்சர் – கழக கூட்டணி வேட்பாளர்கள் கலந்துரையாடல்!

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை 2.5.2026 அன்று, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், கழக வேட்பாளர்கள் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சாக்கோட்டை அன்பழகன், மடத்துக்குளம் ஜெயராமகிருஷ்ணன், தாராபுரம் டாக்டர் இந்திராணி, வீரபாண்டி டாக்டர் ஆ.கா.தருண் மற்றும் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரும் – தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவருமான கு.செல்வப்பெருந்தகை, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் வேட்பாளர்களான அக்கட்சி பொதுச்செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன், நித்தியானந்தம் ஆகியோர் நேரில் சந்தித்தனர். அதுபோது கழக துணைப் பொதுச்செயலாளர்கள் ஆ.இராசா,எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.